# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN AUGUST - 2008

# ECS 2.15 – FUNDAMENTALS OF FINANCIAL ACCOUNTING

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) 2006 ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் நஸீரின் ஏடுகளில் இருந்து பெறப்பட்ட நடவடிக்கைகள் வருமாறு.

01.01.2006 இல் காசு நிலுவை ரூபா 4500.

02.01.2006 இல் காசுக் கொள்வனவுகள் ரூபா 3800. இப்பொருட்களை உட்கொண்டு வரல் செலவு ரூபா 200.

03.01.2006 இல் நிமாலுக்கு கடன் விற்பனை ரூபா 5000. சம்பளம் கொடுத்தது ரூபா 500. பெற்ற தரகு ரூபா 50.

04.01.2006 இல் காதரிடமிருந்து வாங்கிய பொருட்கள் ரூபா 4500. இவற்றைக் கொண்டுவர கொடுத்த கூலி ரூபா 50.

05.01.2006 இல் காசு விற்பனைகள் ரூபா 5000. வங்கியில் இட்ட காசு ரூபா 2500. விளம்பரச் செலவு ரூபா 3000.

06.01.2006 இல் முகைதீனிடமிருந்து பெற்ற கடன் ரூபா 2000. பிரயாணச் செலவு ரூபா 150. தரகு கொடுத்தது ரூபா 50.

07.01.2006 இல் மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூபா 100. வாடகை கொடுத்தது ரூபா 150. தரகு கொடுத்தது ரூபா 150.

நீர் செய்ய வேண்டியது

மேற்குறித்த நடவடிக்கைகளை நஸீரின் காசுப் புத்தகத்தில் பதிந்து சமப்படுத்துக.

(8 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ராமன் என்ற வியாபாரியின் ஏடுகளில் இருந்து பெறப்பட்டவையாகும்.

01.06.2007 ராமன் வியாபாரத்தில் ரூபா 300,000 இனை முதலீடு செய்தார்.

02.06.2007 ரூபா 70,000 பெறுமதியான பொருட்கள் K இடம் கொள்வனவு செய்யப்பட்டன.

04.06.2007 ரூபா 20,000 இற்கு சரக்குகள் விற்பனை செய்யப்பட்டன.

04.06.2007 ரூபா 24,000 இற்கு M இற்கு சரக்குகள் விற்பனை செய்யப்பட்டன.

05.06.2007 உடைமையாளர் ரூபா 4,000 பெறுமதியான சரக்குகளை பற்றினார்.

06.06.2007 தனது உறவினர் Q விடம் ரூபா 50,000 கடன் பெற்றார்.

07.06.2007 ரூபா 300,000 இனை உடைமையாளர் மேலதிகமாக முதலீடு செய்தார்.

08.06.2007 ரூபா 20,000 இற்கு சரக்குகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன், மோட்டார் வாகனம் ரூபா 100,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டது.

10.06.2007 காரியாலய உபகரணம் ஆதம் கம்பனியிடம் ரூபா 80,000 இற்கு வாங்கப்பட்டது.

12.06.2007 உறவினர் Q விடம் வாங்கிய கடனின் ஒரு பகுதியாக ரூபா 20,000 திருப்பிக் கொடுக்கப்பட்டது.

16.06.2007 உடைமையாளர் ரூபா 2000 ஐ தனது தேவைக்காகப் பற்றினார்.

19.06.2007 சொந்தப் பணத்தின் மூலம் K க்கு கொடுக்க வேண்டிய தொகையில் ரூபா 10,000 கொடுக்கப்பட்டது.

22.06.2007 சரக்குகள் ரூபா 20,000 க்கு K இடம் கொள்வனவு செய்யப்பட்டது.

26.06.2007 K க்கு ரூபா 10,000 செலுத்தப்பட்டது.

நீர் செய்ய வேண்டியது

(i) பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளை தயார்செய்து, சமப்படுத்துக.

(ii) பரீட்சை மீதியை தயார்செய்க.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. (அ) பின்வரும் நடவடிக்கைகள் மோகனின் கொள்வனவுடன் தொடர்புடையனவாகும்.

01.01.2004 இல் கமால்தீன் 6 % வியாபாரக் கழிவுடன் ரூபா 12,000 க்கு பொருட்களை விற்றார்.

02.01.2004 இல் ஜலால்தீன் 10% வியாபாரக் கழிவுடன் ரூபா 18,000 க்கு பொருட்களை விற்றார்.

04.01.2004 இல் ஜெமீலிடமிருந்து ரூபா 20,000 பெறுமதியான பொருட்கள் 2 % வியாபாரக் கழிவுடன் வாங்கப்பட்டது.

05.01.2004 இல் சுபைர் ரூபா 3,000 பெறுமதியான பொருட்களை காசுக்கும் ரூபா 7,000 பெறுமதியான பொருட்களை 3 % வியாபாரக் கழிவுடன் கடனுக்கும் விற்றார்.

07.01.2004 இல் சம்சுதீனிடமிருந்து 10 % வியாபாரக் கழிவுடன் ரூபா 30,000 பெறுமதியான பொருட்களை வாங்கி ரூபா 10,000 காசு கொடுக்கப்பட்டது.

நீர் செய்ய வேண்டியது

(i) கொள்வனவு நாளேட்டைத் தயார் செய்க.

(ii) உரிய பேரேட்டுக் கணக்குகளைத் தயார் செய்க.

(8 புள்ளிகள்)

(ஆ) சரவணா நிறுவனம் எப்போதும் தனது சில்லறைக் காசேடு தொடர்பாக குறை நிரப்பி வந்த தொகை ரூபா 4000 ஆக காணப்படுகின்றது. செலவுகள் சமர்ப்பிக்கப்பட்டதும் அத்தொகை காசாளரால் மீளளிக்கப்படும். நிறுவனத்தின் ஒரு வாரத்திற்குரிய நடவடிக்கைகள் கீழே தரப்படுகின்றன.

01.01.2005 களஞ்சியத்தை துப்பரவு செய்வதற்காக தொழிலாளி ஒருவனுக்கு கொடுத்த கூலி ரூபா 75, பொருட்களை வரவழைத்தல் பொருட்டு வெளிநாட்டு முகவருடன் பெக்ஸ் தொடர்புகொண்ட செலவு ரூபா 250, வான் வழித் தபால் செலவு ரூபா 58.

02.01.2005 வியாபார அலுவல்கள் நிமித்தம் ஊழியர் ஒருவருக்குக் கொடுத்த பிரயாணச் செலவு ரூபா 100. அச்சுச் செலவுகள் ரூபா 167.

03.01.2005 உபசரணைச் செலவு ரூபா 125, தபால் முத்திரைகள் வாங்கியது ரூபா 150, அலுவலகப் பாவனைக்கென சுவர் மணிக்கூடு ஒன்று வாங்கியது ரூபா 350, அலுவலக உபகரணங்களைத் திருத்தியது ரூபா 110, காகிதாதிகள் வாங்கியது ரூபா 136, ஊழியர் நலன் காப்புக்கான தேனீர்ச் செலவு ரூபா 75.

04.01.2005 பொருட்களை வாகனத்திலிருந்து இறக்குவதற்கு அமைய ஊழியர்கட்கு கொடுத்த கூலி ரூபா 125, பிரயாணச் செலவு ரூபா 50, குமிழ் முனைப் பேனாக்கள் வாங்கியது ரூபா 44, தந்திச் செலவு ரூபா 42.

05.01.2005 வியாபார சம்பந்தமான பெக்ஸ் தொடர்புகள் செலவு ரூபா 300, அலுவலக உபயோகத்திற்கு வாங்கிய பேனா, குண்டூசி செலவு ரூபா 160. ஊழியர் நலன் பேணும் நோக்குடன் சஞ்சிகைகள் வாங்கிய செலவு ரூபா 105.

06.01.2005 நிறுவன அனுமதியுடன் அருள் என்பவருக்கு கொடுத்த காசு ரூபா 100, அலுவலக வளவு துப்பரவு செய்த செலவு ரூபா 75, உபசரிப்புச் செலவு ரூபா 100.

07.01.2005 பொருட்களை இறக்கிய தொழிலாளருக்கு கொடுத்த கூலி ரூபா 150, அலுவலகப் பாவனைக்கு வாங்கிய கோவை, உறைகள் ரூபா 75, இரட்டிப்புத்தாள் ரூபா 125, தட்டச்சுத்தாள் ரூபா 43, அழைப்பு மணி ரூபா 250, தபாற் செலவு ரூபா 250.

சில்லறைக் காசேட்டைத் தயாரிக்குமாறு கேட்கப்படுகின்றீர்.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. (அ) வரையறுக்கப்பட்ட ரதி ரேடர்ஸ் நிறுவனத்தின் நிதியாண்டு ஒவ்வொரு வருடமும் 31.12. --- இல் முடிவடைகின்றது. தளபாடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

01.01.2004 இல் தளபாடங்கள் கொள்வனவு ரூபா 10,000.

30.06.2005 இல் தளபாடங்கள் கொள்வனவு ரூபா 8,000

31.03.2006 இல் தளபாடங்கள் கொள்வனவு ரூபா 4000

30.09.2007 இல் தளபாடங்கள் கொள்வனவு ரூபா 2000.

கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களுக்கு நிறுவனமானது ஆண்டொன்றுக்கு 10% பெறுமானத் தேய்வை நேர்கோட்டு முறையில் இடுகின்றது.

நீர் செய்ய வேண்டியது:

31.12.2008 வரையான காலப்பகுதிக்கான பின்வரும் கணக்குகளை தயாரிக்குக.

(i) தளபாடக் கணக்கு

(ii) தளபாட பெறுமானத் தேய்வுக் கணக்கு.

(iii) தளபாடப் பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு

(6 புள்ளிகள்)

(ஆ) பெரேராவின் காசேட்டு (வங்கி நிரல்) வரவு மீதி 31.03.2002 இல் ரூபா 7528 ஆக இருந்தது. காசேட்டை கிடைத்த வங்கிக் கூற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது வித்தியாசம் காணப்பட்டது.

இவ்வித்தியாசத்திற்கான காரணங்கள் வருமாறு

1. சமந்தவிடம் இருந்து கிடைக்கப்பெற்று 29.03.2000 இல் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 2600 காசோலை வங்கியால் மறுக்கப்பட்டது. இது பற்றிய பதிவு காசேட்டில் செய்யப்படவில்லை.

2. கடன் கொடுத்தோர் மீது ரூபா 1580 தொகைக்கு வழங்கப்பட்ட ஒரு காசோலை 31.12.2000 க்கு பின்னரே கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

3. கடன் கொடுத்தோர் ஒருவருக்கு ரூபா 2840 க்கு வழங்கப்பட்ட ஒரு காசோலை காசேட்டில் ரூபா 2480 ஆகப் பதியப்பட்டது.

4. வங்கிக் கூற்றின்படி வங்கியினால் வரவு வைக்கப்பட்ட ரூபா 75 வங்கிக் கட்டணங்கள் காசேட்டில் பதியப்படவில்லை.

5. 29.03.2000 இல் வங்கிக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட ரூபா 500 பங்கு லாபங்கள் காசேட்டில் பதியப்படவில்லை.

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

(i) 31.03.2000 இல் இருந்தபடி சீராக்கம் செய்யப்பட்ட காசேடு

(ii) 2000 மார்ச் மாதத்திற்கான வங்கிக்கணக்கிணக்கக் கூற்று

(14 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. (அ) 'நிதிப்பாய்ச்சற் கூற்று' க்கும் 'காசுப்பாய்ச்சல் கூற்று' க்கும் இடையிலான வேறுபாட்டை சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(ஆ) அகமட் உற்பத்தி நிறுவனத்தின் 2006ம் ஆண்டுக்கான கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| இருப்புக்கள் 1.1.2005 இல் உள்ளபடி | |
| மூலப்பொருள் | 10,000 |
| முடிவுறாத வேலை (தொழிற்சாலைச் செலவில்) | 6,000 |
| முடிவுற்ற பொருள் இருப்பு | 18,000 |
| மூலப்பொருள் கொள்வனவு | 180,000 |
| மூலப்பொருள் கொண்டுவரல் கூலி | 3,000 |
| நேர்ச்செலவு | 30,000 |
| உற்பத்திக் கூலி (நேர்) | 80,000 |
| உற்பத்திக் கூலி (நேரில்) | 60,000 |
| காப்புறுதி – தொழிற்சாலை | 6,000 |
| காப்புறுதி – காரியாலயம் | 4,800 |
| மின்சாரம் - தொழிற்சாலை | 7,000 |
| மின்சாரம் - காரியாலயம் | 2,850 |
| வாடகை வரி – தொழிற்சாலை | 24,000 |
| வாடகை வரி – காரியாலயம் | 30,000 |
| எரிபொருள் - தொழிற்சாலை | 8,000 |

| | |
|---|---|
| நானாவிதச் செலவு – தொழிற்சாலை | 5,000 |
| நானாவிதச் செலவு – காரியாலயம் | 2,400 |
| விற்பனை | 500,000 |
| விற்பனைத் தரகு | 20,000 |
| விளம்பரச் செலவு | 30,000 |
| ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு | |
| இயந்திரம் | 30,000 |
| காரியாலய தளபாடம் | 4,000 |
| விநியோக வாகனம் | 6,000 |
| இருப்புக்கள் 31.12.2006 இல் உள்ளவாறு | |
| மூலப்பொருள் | 28,000 |
| முடிவுறாத வேலை (தொழிற்சாலை செலவில்) | 18,000 |
| முடிவுற்ற பொருள் | 80,000 |

நீர் செய்யவேண்டியது –

31.12.2006 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

(i) உற்பத்திக் கணக்கு

(ii) வியாபார இலாபநட்டக் கணக்கு

(16 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

05. (அ) ஒரு உற்பத்தி நிறுவனத்தில் காணப்படும் சொத்துக்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்? சுருக்கமாக வகைப்படுத்தி விளக்குக. (06 புள்ளிகள்)

(ஆ) முருகன் வியாபாரத்தின் 31.12.2006 இல் காணப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு இருந்தது.

| | ரூபா |
|---|---|
| இருப்பு 31.12.2006 இல் | 10,000 |
| வங்கி மீதி | 30,000 |
| காசு மீதி | 8,000 |
| பற்று | 20,000 |
| மூலதனம் | 1,163,200 |
| கடன்பட்டோர் | 7,200 |
| கடன்கொடுத்தோர் | 6,000 |
| கொடுக்க வேண்டிய செலவு | 4,000 |
| முற்பணமாகப் பெற்றிருந்த வருமானங்கள் | 2,000 |
| காணி (கிரயம்) | 1,000,000 |
| மோட்டார் (கிரயம்) | 400,000 |
| 31.12.2006 இல் பெறுமதி | 300,000 |
| தளபாடம் (கிரயம்) | 100,000 |
| 31.12.2006 இல் பெறுமதி | 80,000 |
| பெற்ற ஈட்டுக் கடன் | 240,000 |
| பெறவேண்டிய வருமானம் | 10,000 |
| 2006 ம் ஆண்டின் தேறிய இலாபம் | 50,000 |

31.12.2006 இல் உள்ளபடியான ஐந்தொகையை தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றீர்

(14 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

***